# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.92/2024

### அ.சா. 11 (LW 17 )

| பெயர் | திரு.ஜோஸ்பின் அமலராணி | தொழில் | தலைமை காவலர் |
|---|---|---|---|
| க / பெயர் | பாஸ்கரன் | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | 03.06.2026 |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது கூம்பூர் காவல்நிலையத்தில் பெண் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.07.2022 அன்று வேடசந்தூர் காவல்நிலையத்தில் பெண் காவலராக பணியிலிருந்த போது வடமதுரை அனைத்து மகளிர் காவல்நிலைய ஆய்வாளர் எங்கள் காவல்நிலையத்தின் பொறுப்பு ஆய்வாளராக இருந்த போது நிலைய குற்ற எண். 180/2022 இதச பிரிவுகள் 302, 109 இதச வழக்கில் இறந்து போன ஆரோக்கியசாமி , த/பெ. வேளாங்கண்ணி, S.ஒத்தையூர், கல்வார்பட்டி கிராமம், மாரம்பாடி என்ற முகவரியை சேர்ந்தவரை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்று வேடசந்தூர் அரசு மருத்துவமனை சென்று அங்கு பணியிலிருந்த மருத்துவரிடம் கொடுத்தேன். ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் **அ.த.சா.ஆ.5.** ஆகும். பின்பு மருத்துவரிடம் பிரேதத்தை அடையாளம் காண்பித்து பிரேத பரிசோதனைக்கு உதவியாக இருந்தேன். பிரேபரிசோதனைக்கு பின்பு இறந்தவரின் மனைவி குழந்தை தெரசு வசம் நல்லடக்கம் செய்ய ஒப்படைத்தேன். பிரேதபரிசோதனையின் போது இறந்தவரின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட இரத்தம்பட்ட வெள்ளை கலர் முண்டா பனியன் –1, இரத்தம் பட்ட புளு, ஆரஞ்சு, லைட் மஞ்சள் கலரில் கோடு போட்ட அன்ட்ராயர் –1 ஆகியவற்றை மருத்துவரிடம் இருந்து பெற்று பொறுப்பு காவல் ஆய்வாளரிடம் அதே தேதியில் 18.30 மணிக்கு ஆஜர்படுத்தினேன். ஆய்வாளர் அதை படிவம் 91ல் கைப்பற்றினார். இரத்தம்பட்ட வெள்ளை கலர் முண்டாபனியன் –1 **சா.பொ.1** ஆகும். இரத்தம் பட்ட புளு, ஆரஞ்சு, லைட் மஞ்சள் கலரில் கோடு போட்ட அன்ட்ராயர் –1, **சா.பொ.2** ஆகும். அதன்பிறகு வழக்குச் சொத்துக்களை பகுப்பாய்வு செய்ய வேண்டி ஆய்வாளர் கொடுத்த கடிதத்தையும், வழக்கு சொத்துக்களையும் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். ஆய்வாளர் வழக்குச் சொத்துக்களை பகுப்பாய்வு செய்ய வேண்டி நீதிமன்றத்திற்கு கொடுத்த வேண்டுகோள் கடிதம் **அ.த.சா.ஆ.6.** ஆகும். அதன்பின்பு நீதிமன்ற உத்தரவு பெற்று

24.07.2022 அன்று மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து இரசீது பெற்றேன். வழக்கு சொத்துக்கான நீதிமன்ற உத்தரவு கடிதம் **அ.த.சா.ஆ.7.** ஆகும். அதன் பிறகு உடல் உள்ளுறுப்புக்களை பகுப்பாய்வு செய்ய வேண்டி ஆய்வாளர் கொடுத்த கடிதத்தை நீதிமன்றத்தில் கொடுத்து உத்தரவு பெற்று 09.09.2022 அன்று மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து இரசீது பெற்றேன். உடல் உள்ளுறுப்புக்களை பகுப்பாய்வு செய்ய வேண்டு நீதிமன்றத்திற்கு ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் **அ.த.சா.ஆ.8.** ஆகும். உடல் உள்ளுறுப்புக்கான நீதிமன்ற உத்தரவு கடிதம் **அ.த.சா.ஆ.9** ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

வழக்கில் இறந்த ஆரோக்கியசாமி என்பவரை முதல் முதலில் பிரேத பரிசோதனை அறையில்தான் பார்த்தேன் என்றால் சரிதான். பிரேதத்தின் மீது இருந்த உடைகளை பெறுவதற்கு ஆய்வாளர் தனியாக வேண்டுகோள் கடிதம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பிரேதத்தின் மீதிருந்த உடைகளை மரப்பெட்டியில் வைத்து ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் பிரேதத்தை அடையாளம் காட்டவில்லை என்றாலும், பிரேதத்தின் மீதிருந்த உடைகளை கைப்பற்றி ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை என்றாலும் சரியல்ல. உடல் உள்ளுறுப்புக்களை மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைக்கவில்லை என்றாலும் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை – இல்லை</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.06.03 18:04:20 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.